22 T II

# "GEO" Published

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2020 ஆவணி**
**General Certificate of Education (Adv. Level) Examination, August – 2020**

# மாதிரிப் பரீட்சை –03

புவியியல் - I I
Geography - I I

Teacher:-
M.Sujinthan, BA(Hons) Spl.Geo

மூன்று மணித்தியாலங்கள்
Three Hours

**அறிவுறுத்தல்கள்:-**

* ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களிற்கு மாத்திரம் விடை எழுதுக

## பகுதி *I* – பௌதிகப் புவியியல்

***1.***

*(i)* கிளர் மின் வீச்சு மேற்காவுகை ஓட்டச் செயன் முறை என்பதன் மூலம் விளங்குவது யாது? (*3* புள்ளிகள்)

*(ii)* புவியின் உட்பாகம் தொடர்பான நிலமைகளை அறிவதற்கு ஏதுவான நேரடி, மறைமுகச் சான்றுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (*3* புள்ளிகள்)

*(iii)* புவியின் உட்பாக ஆய்வின் அடிப்படையில் (இயல்பு அடிப்படையில்) அதன் பிரதான படைகளையும் புனையா வரைபடத்துடன் குறிப்பிடுக? (*4* புள்ளிகள்)

*(iv)* மேலே குறிப்பிடப்பட்ட பெயரிட்ட பிரதான படைகளில் ஏதாவது ஒன்றினை தெரிவுசெய்து அதன் கட்டமைப்பு, சேரக்கையின் இயல்புகள் **மூன்றினைக்** சுருக்கமாக விபரிக்குக? (*6* புள்ளிகள்)

*(v)* புவியின் மேற்பகுதியில் இருந்து உட்பகுதி நோக்கிய புவிக்கட்டமைப்பின் திணிவு,வெப்பநிலை, அமுக்கநிலை வேறுபாட்டிற்கான காரணங்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக? (*4* புள்ளிகள்)

***2.***

*(i)* உலகின் பிரதான சுண்ணக்கல் பிரதேசங்கள் காணப்படும் முக்கிய இடங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (*2* புள்ளிகள்)

*(i)* சுண்ணாம்பு பிரதேசத்தின் உருவாக்க செயன்முறையை சுருக்கமாக விளக்குக? (*6* புள்ளிகள்)

*(ii)* சுண்ணாம்பு பிரதேசத்தின் அரித்தல் நிலவுருவங்கள் **இரண்டினையும்** படிதல் நிலவுருவங்கள் **இரண்டினையும்** விளக்கப்படங்களுடன் விளக்குக? (*6* புள்ளிகள்)

*(iii)* முருகைக்கற்பாறைகள் வளர்ச்சியடைவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக எவை? (*6* புள்ளிகள்)

***3.***

*(i)* காலநிலையை கட்டுப்படுத்தும் காரணிகளைக் குறிப்பிடுக? (*2* புள்ளிகள்)

*(ii)* இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறும் வழிமுறைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (*5* புள்ளிகள்)

*(iii)* அயனக் காலநிலையின் பிரதான வகைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றின் முனைப்பான பண்புகளை பரம்பல், வெப்பநிலை, மழைவீழ்ச்சி, இயற்கை தாவரம் என்ற பண்புகளின் கீழ் ஆராய்க? (*7* புள்ளிகள்)

*(iv)* இலங்கையின் காலநிலையில் இடைஅயன ஒருங்கல் வலயத்தின் பங்களிப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு ஆராய்க? (*6* புள்ளிகள்)

***4.***

*(i)* உயிரினக் கூட்டம் என்றால் என்ன என்பதனை வரையறை செய்க? (*4* புள்ளிகள்)

*(ii)* இலங்கையில் காணப்படும் உயிர்பெருந்திணிவு வகைகளினைக் குறிப்பிட்டு நீர் தெரிவு செய்த ஒரு வகையின் பண்புகளை சுருக்கமாக விளக்குக?

(*6* புள்ளிகள்)

*(iii)* உலகில் உயிரினக் கூட்டம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் **மூன்றினை** உதாரணத்துடன் விளக்குக? (*6* புள்ளிகள்)

*(iv)* இலங்கையில் காட்டு வளங்களை பேணி பாதுகாக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை **மூன்றினை** குறிப்பிட்டு விளக்குக? (*6* புள்ளிகள்)

## பகுதி *II* – மானிடப் புவியியல்

***5.***

*(i)* குடியிருப்பு என்பதனை வரையறை செய்து அதன் அடிப்படை அம்சங்களை குறிப்பிடுக?

(*2* புள்ளிகள்)

*(v)* கிராம மற்றும் நகரக் குடியிருப்புகளுக்கு இடையிலான வேறுபாடுகளை **நான்கு** பண்புகளின் கீழ் ஆராய்க? (*6* புள்ளிகள்)

*(vi)* வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் விரைவான நகராக்கத்திற்கான காரணிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக? (*6* புள்ளிகள்)

*(vii)* இலங்கையில் நகரமயமாக்கத்துடன் தொடர்புடைய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக?

(*6* புள்ளிகள்)

M.SUJINTHAN

***6.***

***(i)*** சேதன விவசாயம் என்பதனைத் தெளிவுபடுத்துக? (***6*** புள்ளிகள்)

***(ii)*** பசுமைப்புரட்சி தாக்கம் செலுத்திய துறைகளைக் குறிப்பிட்டு விளக்குக? (***6*** புள்ளிகள்)

***(iii)*** விவசாயத்தில் இரசாயன பொருட்களின் பாவனையால் சூழலுக்கு ஏற்படும் தீமைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (***6*** புள்ளிகள்)

***(iv)*** இலங்கையின் விவசாயத்துறை எதிர்நோக்கும் சவால்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (***6*** புள்ளிகள்)

***7.***

***(i)*** உற்பத்திக் கைத்தொழில், அகழ்வுக் கைத்தொழில் என்பதனைத் தெளிவுபடுத்துக? (2 புள்ளிகள்)

***(ii)*** இரும்புத்தாதின் பரம்பல் மற்றும் வர்த்தக பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (***6*** புள்ளிகள்)

***(iii)*** அகழ்வுக் கைத்தொழில் சார்ந்த பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (***6*** புள்ளிகள்)

***(iv)*** இலங்கையின் பொருளாதாரத்திற்குக் கைத்தொழில்களின் பங்களிப்பிற்கான காரணிகள் **மூன்றினை** உதாரணங்களுடன் குறிப்பிட்டு விளக்குக? (***6*** புள்ளிகள்)

***8.***

***(i)*** உலகளாவிய ரீதியில் காணப்படும் பிரசித்தி பெற்ற நிலக்கரி வயல்கள் **இரண்டினையும்** நிலக்கரிப் பரம்பலின் முனைப்பான அம்சங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக? (***4*** புள்ளிகள்)

***(ii)*** உலகில் மிக முக்கியமான சக்தி மூலமான நிலக்கரி பயன்பாட்டின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (***5*** புள்ளிகள்)

***(iii)*** உலகில் சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்படும் சக்தி நெருக்கடிக்குத் தீர்வாகப் பயன்படத்தக் கூடிய **மூன்று** மாற்றுச் சக்திமூலங்களின் ஆற்றல்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக பரிசீலிக்கக? (***5*** புள்ளிகள்)

***(iv)*** இலங்கையில் சக்தி மூலமாகக் காணப்படும் நிலக்கரியின் பயன் பாட்டில் காணப்படும் மூன்று பிரச்சனைகளினைகள் **மூன்றினை** விபரிக்குக? (***6*** புள்ளிகள்)

M.SUJINTHAN